Source: *Tamil Murasu,* p3
Date: 22 April 2016

‘சமூக அறிவியல் ஆய்வை மேம்படுத்த கூடுதல் தகவல்களை அரசு வெளியிடலாம்’

சமூக அறிவியல் ஆய்வை மேம் படுத்த கூடுதல் தகவல்களை வெளியிட்டு அரசாங்கம் உதவலாம் என்று ஓய்வு பெற்ற கௌரவ மூத்த அமைச்சர் கோ சோக் டோங் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் பட்டதாரிகள் பொழுது போக்கு மன்றத்தில் நேற்று நடைபெற்ற சமூகச் சேவை ஆய்வு மைய மாநாட்டில் திரு கோ பேசினார். ஆய்வு நடத்துவதற்குத் தகவல் மிகவும் முக்கியம் என்று குறிப்பிட்ட திரு கோ, நடப்பில் இருக்கும் கொள்கைகளை அல்லது புதிய கொள்கைகளை உருவாக்க ஆய்வு உதவும் என்று கூறினார்.

“தரமிக்க சமூக அறிவியல் ஆய்வுக்கும் நேர்த்தியான கொள்கை உருவாக்கத்துக்கும் உள்ள ஒற்றுமையை அரசாங்க அமைப்புகள் உணரவேண்டும். ஆய்வு செய்பவர்கள் மேலும் பல அரசாங்கத் தகவல்களைப் பெற உதவி செய்தால் சமூக அறிவியல் ஆய்வை மேம்படுத்தலாம்,” என்று திரு கோ தெரிவித்தார்.

இது தொடர்பாக, அரசாங்கத் தால் இயலாத, இன்னும் நடவடிக் கையில் இறங்காத இடங்களில் சமூகச் சேவை துறையும் சமூகப் பங்காளிகளும் அவற்றின் பங்கை ஆற்றவேண்டும் என்றார் திரு கோ. உதவி தேவைப்படும் இடங் கள் குறித்து இந்த அமைப்புகள் அரசாங்கத்துக்குத் தகவல் தெரி விக்கவேண்டும் என்றும் நடப்பில் உள்ள திட்டங்கள் பொது மக்களுக்கு உதவுவதை இந்த அமைப்புகள் உறுதி செய்ய துணை புரியலாம் என்றும் திரு கோ கூறினார்.

அரசாங்கம், சமூகம், கல்வி யாளர்கள் ஆகியோர் இடையே நிலவி வரும் பங்காளித்துவம் முன்பைவிட வலுவாக இருக்க வேண்டும் என்று திரு கோ தெரி வித்தார். சிங்கப்பூர் தற்போது குழப்பமிக்க சமூகச் சவால்களை மிகுதியாக எதிர்நோக்குவதால் இந்த நிலை அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

இதற்கு உதாரணமாக வரு மான இடைவெளி மோசமடைந்து வருவதை அவர் சுட்டினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.